342

17 JUL 1931

Registered No. M. 2445.

உ
சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கொடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றக்
கழகத்தினின்று வரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கில ஆண்டு ஆடித்திங்கள் 1929 — ஜூலை. | இதழ் எ

க. காலத்தின் அருமையும் நமது கடமையும்:—

உ. ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீன பீடமும் அதன் பெருமையும் :—

ந. வீரசைவப்பிரசாரம்:—

ச பஸ்மதாரணம் :—

ரு. ஸ்ரீபசவேச விஜயம் : —

சு. பெண்பாலர் :—

எ. அபிஷேகமாலையுரை : —

பத்திராசிரியர் { வீ. குமாரவீரையர்,
வீரசைவநிலையம்' முசிறி, திருச்சி ஜில்லா

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

உ

தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகா சங்கம்.

பெரியோர்களே!

இம்மகா சங்கத்தின் ஆருவது பெருங்கூட்டம் ஜூலை 2-வது வாரத்தில் நடைபெறலாமெனக் குறிப்பிடப் பெற்றிருந்தது. அதனைக் காணப்பலரும் அவாவுடன் எதிர்பார்த்துமிருக்கலாம். இம்மகாசங்கத்தின் நிறைவேற்றக் கழகத்தார் பொருட்செலவு செய்து கூட்டத்தைக் கூட்டி விருந்தளித்து பல தீர்மானங்களை நிறைவேற்றி ஆடம்பரத்துடன் பத்திரிகையில் வெளியிட்டு மகிழ்ந்தவளவில் அமைந்துவிடும் மற்றயரைப் போலல்லாது, பெரும்பொருள்செலவும் பெருமுயற்சியும் செய்து கூட்டும் கூட்டம் எண்ணிய எண்ணங்களையும் நிறைவேற்றுவதாகவும், நிறைவேற்றிய தீர்மானங்கள் கூடிய வரையில் அனுபவத்தில் வந்து பயனைத்தந்ததாகவும் இருத்தலே நமது மகாசங்கத்திற்குப் பெருமையாமெனக் கருதுகின்றனர். ஆதலின், முன்னரே தீர்மானித்த தீர்மானங்களுள் இரண்டொன்று முடிவுபெருமையாலும், இவ்வாண்டில் செய்யக்கருதிய மகா சங்கத்தின் நோக்கமாகிய உபகாரச்செயல்கள் முடிவுக்கு வாராமையாலும், மடாலயங்களிலிருந்து எதிர்பார்த்த திருமுகம் வரத்தாழ்த்தமையாலும், பொறுப்பாளரும் காரியதரிசிகளும் குறிப்பிட்ட கடமையைச் செய்யாதிருந்துவிட்டமையாலும் மகா சங்கத்தை குறிப்பிட்டபடி நடத்தாமல் மற்றொரு நாளில் நடத்தலாமென ஆலோசித்திருக்கின்றனர்.

பொறுப்பாளரும் காரியதரிசிகளும் சந்தா முதலியவற்றை வசூலித்துக் கணக்குடன் இம்மாதத்திற்குள் அனுப்புதல்வேண்டுமெனவும், நிகழ்ச்சிக்குறிப்பு முதலியன இப்பத்திரிகை வாயிலாகவே வெளியிடப்பெறுமாதலின் சங்கத்தின் உறுப்பினரனைவரும் சந்தாத்தொகையைப் பொறுப்பாளரிடங் கொடுக்கவேண்டுமெனவும், வீரசைவாபிமானிகளனைவரும் தம்மாலியன்ற உணவுப்பொருள்களையாயினும் பொருளையாயினும் நன்கொடையாகக் கொடுத்துதவி மகா சங்கத்தை நடத்திவைக்கவேண்டுமெனவும் இம்மகா சங்கத்தார் வேண்டுகின்றனர். திருவருள் முன்னின்று உதவுக!

இங்ஙனம்,

தங்கள், த. காரியதரிசி.

17 JUL 1931

உ
சிவமயம்

"வீரசைவம்."

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலையதேசிகசுவாமிகள் அருட்கொடையால்
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத்தினின்று
வருஞ் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கிலஆண்டு ஆடித்திங்கள் 1929 — ஜுலை. | இதழ் எ

காலத்தின் அருமையும் நமது கடமையும்

முருகோட்டந் தரப்பாயு மும்மதமு மூற்றெடுப்ப
முறிவிற் கோட்டும்
ஒருகோட்டு மழகளிற்றை யிருகோட்டு முதுகளிரு
யுலவக் காட்டிப்
பருகோட்ட நறைவேட்டுப் பைங்கோட்டுத் தினைப்புனத்துப்
பரண்மேற் கொண்டு
குருகோட்டும் பெடைமணந்த குமரகோட் டத்தடிகள்
குலத்தாள் போற்றி.

வீரசைவ சித்தாந்த சமயாபிமானச் செல்வர்களே!

எங்கும் நீக்கமின்றி நிறைவுற்று விளங்கும் எல்லாம் வல்ல இறைவனது பெருங்கருணைத் திறம் எத்துணை நாள் விரித்துரைப்பினும் சொல்லளவில் அடங்காது பெருகுதல் போலக் காலத்தின் அருமையும் நமது சொல்லளவில் அடங்காது பெருகுந் தன்மை யுடையது. காலம் தனதருமையை யுணர்ந்து ஒவ்வொரு கடிகையையும் வீணாக்காது பொன்போற்றி முயல்வார்க்கு அவரது அறிவு ஆற்றல் பொருள் செயல் முதலியன அணுவளவினவாயினும் மலையளவினவாக்கிப் பெரும் பயனளிக்குந் தன்மையை யுடையது. அதன் அருமையை யுணராது வறிதே உறங்குவார்க்கு மலையளவினவாகக் காணப்படும் பொருள் முதலியவற்றை வானிடு வில்லின் தோற்றம்போல் அழிவுறச் செய்து வறுமையைத் தரவல்லது. கால

மென்னுஞ் சக்கரம் இடைவிடாது சுழன்றுகொண்டிருக்கின்றது. மக்களாகிய நாமும் அச்சக்கரத்தின் வாய்ப்பட்டு விலகுதற்கிடமின்றி நாளுஞ் சுழன்று கொண்டிருக்கிறோம். இறைவனும் அங்ஙனஞ் சுழன்றலையும் நமக்கு நமது வினையளவாகிய பயனையளித்துத் தண்ணருள் புரிகின்றான். அவ்விறைவனது அருள் பெற்றுய்யும் நாமும் அவனுவப்பனவாகிய உலகியல் நடத்தற்குரிய உபகாரச் செயல்களைச் செய்தலாகிய நமது கடமையை இடைவிடாது செய்துவரல்வேண்டும்.

இத்தண்டமிழ் நாட்டின் கண்ணும் நமது வீரசைவ சமயமானது மிகப்பழமையான கால முதல் சீருஞ் சிறப்பும் பெற்று நிலவிவந்துள்ளது. தமிழ் நாட்டு மூவேந்தராகிய சேர சோழ பாண்டிய அரசர்களாலும் போற்றிப் பாராட்டப் பெற்றிருந்தது. தண்டமிழ் முனிவராகிய அகத்தியரும் வீரசைவரே. அவருள்ளிட்ட இந்நாட்டிலுள்ளாரனைவரும் ஓர் காலத்தில் வீரசைவராகவே இருந்தாரெனக் கூறவும் தக்க சான்றுகள் உள்ளன. இடைப்பட்ட காலத்தே குடிப்புகுந்தாரது சூழ்ச்சியே இத்துணைப் பிரிவினை உண்டாக்கிவிட்டது. கும்பகோணம் பெரிய மடம் என வழங்கும் ஸ்ரீசாரங்கதேவ தேசிகேந்திர சுவாமிகளுடைய வீர சிங்காதன பீடமே மிகப் புராதனமானது. சில ஆண்டுகட்கு முன் வரையிலும் கும்பகோணம் கும்பேஸ்வராலயமும் அப்பீடாதிபதிகளின் ஆட்சியிலிருந்துவந்தது. அதற்குரிய சான்றுகளும் உள்ளன. திருப்பெருந்துறை ஆத்மநாதராலயமும் அம்பலத்தாடுவார் என்னும் வீரசைவ மடாதிபதிகளின் ஆட்சியிலிருந்து வந்துள்ளது. சிதம்பரம் ஸ்ரீநடராஜப்பெருமானது நித்திய பூசைக்குத் தடையாக நேர்ந்த இடையூறும் வீரசைவப் பெரியாரொருவராலேயே களையப்பெற்றது. மதுரைத் தடாதகைப் பிராட்டியார் திருவுருவமும் மகம்மதிய கலகத்தில் பழுதுறுவண்ணம் பாதுகாக்கப் பெற்றதும் மைசூரிலிருந்த வீரசைவப் பெரியாராலேயே எனக்கூறச் சரித்திர ஆராய்ச்சி யிடந்தருகின்றது. இவையனைத்தும் இடையில் நேர்ந்த சில பல காரணங்களால் மறையலாயின. ஆதார நூல்கள் போற்றுவாரின்றிப் பிறர்வயப்பட்டுக் கரந்துறையலாயின. தாரணமுடையாரும் அதனை யிழந்து அவைதிகராயினர். இப்பொழுதும் சிலர் மாத்திரம் வீரசைவக் கொள்கையைச் சிறிதும் நழுவவிடாது வைராக்கியசீலராயும் வைதிகராயும் விளங்குகின்றனர். ஒரு கூட்டத்தார் தம் பழய முறைகளைக் கைநழுவவிட்டு அவைதிகராயிருப்பினும்

வீரசைவரெனச் சொல்லிக்கொள்ள முற்படுகின்றனர். அவரும் அவர் பால் காணப்படும் அவைதிகக் குறைபாடுகளைக்கண்டு வீரசைவ மென்பது இக்கொள்கைகளை மேற்கொண்டதுதானோ எனப் பிறர் எள்ளி நகைக்கா வண்ணம் தாமேற்கொண்ட பெயருக்கேற்ப ஒழுக்க வழக்கங்களைச் சீர்திருத்தஞ்செய்து தம்மையுயர்த்திக் கொள்வாராக. இதைப்பற்றி நீலகிரியை யடுத்த நெல்யாலம் வீரசைவ சமஸ்தானம் இராணி பௌரம்மணியவர்களுடைய அரண்மனையிலிருந்து சில வினுக்களுடனும் ஓர் அரிய கடிதம் வந்துள்ளது. அதன் கருத்தை யனுசரித்து நமது பத்திரிகையினும் வடநாட்டுப்பத்திரிகையினும் இந் நாட்டிலுள்ள வீரசைவ மடங்கள், அவற்றின் சாசனங்கள், அம்மடாலயங்கள் செய்யும் வேலை, ஆங்காங்குள்ள வீரசைவ நூல்கள், வீரசைவர்களுடைய ஒழுக்க வழக்கங்களடங்கிய முன்னேற்றம் முதலியவற்றை ஆராய்ந்து வெளியிடுங் காலம் அருமையாகக் கிடைத்திருக்கின்றது. வீரசைவ மடாதிபதிகளும், வீரசைவப் பெரியாரும் இவற்றை யாராய்ந்து வெளிப்படுத்துதல் தமக்குரிய கடமையென வோர்ந்து இம்முயற்சியில் முற்படுவார்களாக. பொம்மபுரம் ஸ்ரீமத் சுவாமிகளும் அம்மடாலயத்தின் சாசனங்களை யாராய்ந்தெடுத்து உதவியுள்ளார்கள். அதுவும் இம்மாத விதழிலிருந்து தொடர்பாக வெளியிடப்பெறும். திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார்சுவாமிகளும் இதற்கான பேருதவிகளைச் செய்வதாக வாக்களித்துள்ளார்கள் இறைவனருள் முன்னிற்பதாகுக.

ஸ்ரீபொம்மபுரம்

சிவஞானபாலய தேசிகராதீன பீடமும் அதன் பெருமையும்.

O களரின் முளைத்த செங்கரும்பு கண்ணுற் பயந்த விளங்குமரன்
கதிர்கான் றெழுசெம் பரிதியுடல் கறுப்பச் சிவந்த சுடரிலைவேல்
தளிரி னியல்வென் றுலவுசிறு தவளை வாய்ச்சில் லரிக்குரற்பூஞ்
சதங்கைச் செம்பொற் சிறுதண்டைத் தாளென் றலைமேல் வைத்த [பிரான்
விளரி வரிவண் டிமிர்குவளை வியன்சீர்த் தணிகைக் கருங்கல்லின்
மிசைப்பூப் பித்தா னெனக்கருதி வினையே னுள்ளக் கல்லிடைத்தாண்
முளரி மலர்கள் பூப்பித்த முதல்வா முத்தந் தருகவே.
முருகன் மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே.

௨-வது சிவஞானதேசிக சிவாசாரிய சுவாமிகள்.

இவர்கள் காலத்திற்றான் இம்மடாலயம் பல சிறப்புக்களைப் பெற்றுப் புகழ்பெறலாயிற்று. இவர்கட்கு முன்னிருந்த சுவாமிகள் மடாலயத்தின் தோற்றத்திற்கே காரணராயினும் பன்னெடு நாள் (1000 வருடம்) மலைக்குகைகளில் சிவயோக சமாதியிலிருந்து இடையிடையே வெளிப்பட்டு முடிவில் மயிலம் சுப்பிரமணிய சுவாமியின் தென்பாலுள்ள சிவலிங்கத்திற் கலந்தருளினாரெனச் சரித்திரங் கூறுகின்றது. கர்ண பரம்பரையும் அவ்வாறே வழங்குகின்றது. 2-வது பட்டத்து சுவாமிகள் அருள் வடிவாக அமர்ந்து பலசித்திகளைப்புரிந்து மடாலயத்திற்கு வேண்டிய அங்கங்களை யெல்லாம் திரியம்பக மகாராஜன் முதலிய அரசர்களால் செய்விக்கச் செய்து பல வாண்டுகள்வரை இவ்வுலகத்தில் நிலவிப்புகழுடம்புடன் விபூதிமயமாயினரெனத் தெரியவருகிறது. சிலநாட்களுக்கு முன்னாராய்ந்ததில் சுவாமிகளுடைய வமிசாவழியும், அரசர்களுடைய வமிசாவழியும், நவாப்பு முதலிய பேரரசர்களால் கொடுக்கப்பெற்ற அறிக்கைகளும் வெவ்வேறு பாஷை வடிவமாகக் கிடைத்தன. அவை இதனடியிற் குறிப்பிடப்படுகின்றன.

O களரின் முளைத்த செங்கரும்பு— திருக்களர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சுயம்புலிங்கம்.

அய்தராபாத் நவாபு ஊம்தாதுல் முல்கு சிராஜுட் டவுலா அங்வாருடீன் கான்பகதூர் மான்சூர் ஜங்க் அவர்கள் கொடுத்த அறிக்கை :—

(அரபி பாஷையில் முத்திரை)

தமிழிலிருக்கவேண்டியதாய்க் கேட்டபடிக்கு உத்தரவானது.

தூகூயடு-ம் பசலி ஜபர்-ஸ்ரீ உயசூ-உ (கி. பி. 1756) அய்தராபாக்கத்துக்குக் கீழ்ப்பட்ட சர்க்கார் சஞ்சீ முதலான தாலூகாக்களில் இப்போதிருக்கிற ஆமீல்தாரர்களுக்கும், மேல் வருகிற ஆமீல்தாரர்களுக்கும் அறியப்படுத்துகிறது என்னவென்றால்

ஞான ராஜதானியான பொம்மயபாளையம் பெரியமடம் சிவ கஞ்சிமயூராசல நிவாசர் எதீசுரகர்த்தரான ராசகுருபாலய சுவாமியார் அவர்கள் தலங்களில் சுவாமி தரிசனத்திற்கு ஆகவும், தேசங்களிலிருக்கிற மடங்களின் விசாரணைக்காகவும் சிக்ஷியாத்திரைக்காகவும் விஜயஞ் செய்வதற்காக இதனடியிற்கண்டிருக்கிற பிருதுகள் வகையராக்கள் மாமூலாய் சுவாமிக்கு பரம்பரையாய் நடந்துவருகிறதென்றும், அதை யாவரும் ஆக்ஷேபிக்கக் கூடாதென்றும் முன்னேயிருந்த நவாபு சூப்பகாற்கான் பாதர், தாவுத்துக்கான்பாதர் அவர்கள் தாக்கீதுகளும் முன்னமே உண்டாயிருக்குது. இப்பவும் உங்களுக்குத் தெரிவிக்கிறதென்னவென்றால்.

மேற்படி சுவாமி இப்போது மடம் விட்டு சஞ்சாரம் வருகிறபடியினாலே எங்தெந்த வூர்களில் எங்தெந்த கோவில்களில் வந்தாலும் அவாளவாள் இலாக்காக்களில் யாதொரு வித்தியாசமும் வராமல் ஜாக்கிரதையாயிருந்து நடப்பிக்கவும்.

அவாளுடைய சாமான்களை சவரக்ஷணை செய்துகொள்ள வேண்டியதுக்காக எட்டுத் துப்பாக்கி செனமும், எட்டுக்கத்தி செனமும் யாத்திரைக்கு வைத்துக்கொள்ளும்படிக்கு உசூரில் உத்தரவு கொடுத்திருக்கிறது. மேலும் துஷ்டாளாலேயாவது கள்ளராலேயாவது தொந்திரவு நேரிடுகிறதாய் சுவாமி மனிஷாள் உங்களுக்குத் தெரிவித்தால் அவாள் அவாள் இலாக்கா பரியந்தம் வித்தியாசங்கள் வராமல் பந்தோபஸ்தாயிருந்து நடத்தினதற்கு உடனே உசூருக்குத் தெரிவித்துக்கொண்டு வரவும். இதனாலே நம்முடைய யோகத்துக்கும் ஆயிசுக்கும் பிராத்தனை செய்துகொண்டு வருவார்கள்.

பிருதுகள் :—

1. யாளிமுக பாலீகை
2. யாளித்தடி
3. மகர வட்டம்
4. பச்சைத் துவசம்
5. யாளிமுக க்ஷரமரம்
6. ராச தோட்டி
7. ஏக சத்திரம்
8. ரிஷபத்தடி
9. பானு வட்டம்.
10. தூப பீடிகை.
11. பகல் தீவட்டி.
12. அருகு
13. பாலா
14. மகரடாலி.
15. புருசு
16. ருத்திர சங்கம்.

இப்படிக்கு அறியவும்.

(எட்டிலும் சிலையிலுமிருந் தெழுதப்பட்டது.)

கலியுகாதி-ஹ௵ ௩௨௪௬ க்கு மேல்

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானகுருலிங்க சுவாமிகள் பரம்பரை.

க.	சதாசிவ பாலையசுவாமி (சங்கு கன்னர் அவதாரம்)	ஹ௵ ௬
உ.	சிவஞான பாலையசுவாமி	„ ௫௭
௩.	குண்ணம்பாளையம் பாலையசுவாமி	„ ௫க
௪.	சிதம்பரம் பாலையசுவாமி	„ ௩௨
௫.	கந்தப்பனூர் பாலையசுவாமி	„ ௬
௬.	கறையாம்புத்தூர் பாலையசுவாமி	„ க௩
௭.	மாத்தூர் பாலையசுவாமி	„ க௫
௮.	குமாரச்சார்வாய் பாலையசுவாமி	„ ௯
௯.	வி. சிவகுன்றம் பாலையசுவாமி	„ ௩
க0.	விருத்தாசலம் பாலையசுவாமி	„ கக
கக.	சிதம்பரம் பாலையசுவாமி	„ உ௫
க௨.	கல்யாணபட்டணம் விருபாக்ஷ பாலையசுவாமி	„ ௮
க௩.	விருத்தாசலம் பாலையசுவாமி	நாள் க௮
க௪.	சிதம்பரம் பாலையசுவாமி	ஹ௵ உ௬
க௫.	நல்லாற்றூர் சுவாமி (சிவசுப்பிரமணிய ஐயர்)	„ ௪௪
க௬.	ஷையூர் „ (இரணிய சபாபதி ஐயர்)	„ உ௯
க௭.	ஷையூர் „ (பொன்னுசாமி ஐயர் என்கிற முருகையர்)	„ கக
	ஆக பட்டம் க௭-க்கு வருஷம்	க௭௮௩

மேற்கண்ட பட்டம் 17-க்கு 1783-க்குக் கலியுகாப்தம் 5029-க்குத் தமிழ் பிரபவ-ஹு மாசி-மீ 13-உ வரை 17-வது பட்டத்து சுவாமி களுடைய காலம்.

ஷை பிரபவ-ஹு மாசி-மீ 13-உ காலை உதயத்தில் நல்லோரை யில் 18-வது பட்டம் சுவாமிகள் சிம்மாசனத்தமர்ந்தருளினார்கள். இவர்கள் சிதம்பரம் பாலையர் மடம் இரேவணாராத்திய கோத்திர பரம் பரை ஸ்ரீகந்தசாமி ஐயர் அவர்களுடைய தவப்புதல்வராக அவதரித்து இளமையிற் கல்வி பயின்று பட்டத்திற்குரியவரானார்கள். இவர் களுடைய பூர்வாச்சிரமப் பெயர் K. குமாரசாமி ஐயர் என்ப. இவர் கள் இவ்வருடத்திலேயே மடாலயத்தில் வீரசைவ பாடசாலையொன்று நிறுவி வீரசைவ மாணவர்கட்கு உண்டி உடை முதலியன கொடுத்து வீரசைவ சாஸ்திர சம்பிரதாயப்படிப்புகளை நவீன முறையையுந் தழுவிக் கற்பித்து, கல்வித்தானஞ் செய்து சமய முன்னேற்றஞ் செய் யத் திருவுளம்பற்றியுள்ளார்கள். இப்பாடசாலையில் தக்க கணக்கா யரைக்கொண்டு தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சியும் சமஸ்கிருத வியாகரண காவியப் பயிற்சியும் போதிய அளவு ஆங்கிலப்பயிற்சியுஞ் செய்வித்து மாணவர்களை சிதம்பரம் இராஜா சர். அண்ணாமலை செட் டியார் அவர்கள் தமிழ்க் காலேஜில் வித்துவான் பரீக்ஷை வகுப்பில் சேர்தற்குரியவர்களாகச் செய்யப்பெறும். இதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. சண்முகநாதன் திருவருள் சார்பாக நின்றுதவுக.

ஸ்ரீமத் பஞ்சாசாரியப்பிரசீதந்து.

வீரசைவப் பிரசாரம்.

(வீரமாகேச, S. M. ஆறுமுகாரியர் அவர்கள் வீரசைவப் பிரசாரகர்)

மகனீயரே !

உலகத்தில் எண்ணிறந்த மதங்கள் இருக்கின்றன. அவற்றுள் இப்பொழுது மிகவும் பிரசித்திபெற்றிருப்பன கிறிஸ்து மதம், மகம் மதீய மதம், புத்தமதம், இந்துமதம் என்பனவாம். கிறிஸ்துமதம் உலகத்தில் எல்லாக்கண்டங்களிலும் பல அரசர்களாலும் மிஷின்

என்னும் சபைகளாலும் பரிபாலிக்கப்பட்டுப் பரவியிருக்கின்றது. மகம்மதிய மதம், துருக்கி, ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம் பாரசீகம், அரேபியா, எகிப்து முதலான தேசங்களில் அத்தேசங்களின் அரசர்களால் பரிபாலிக்கப்பட்டு இந்தியாவிலும் பரவியிருக்கின்றது. புத்தமதமும், சைனு, டிபெட், மங்கோலியா, மஞ்சூரியா, கொரியா, ஜப்பான் முதலிய இடங்களில் ஆங்குள்ள அரசர்களால் பரிபாலிக்கப்பட்டு எங்கும் பரவியிருக்கின்றது. இந்து மதமோ பரிபாலிப்பவரொருவருமின்றி முற்கூறிய மூன்று மதங்களினிடையில் நசுக்குண்டு கிடக்கின்றது. இவ்விந்து மதமும் ஒரு மதமல்ல. வேதத்தையங்கீகரித்த பல மதங்கள் பொதுவாக இந்துமதமென்று சொல்லப்படும். இத்தேயத்திற்குப் பரதகண்டம், ஆரியவர்த்தம் என்பன பூர்வீகப்பெயர்கள். வேறு பல காரணங்களால் இத்தேயத்திற்கு முன்னிருந்த பெயர்சள் நீங்கி இந்தியா என்னும் பெயர் வழங்கலாயிற்று. இதனுல் இத்தேயத்தினர் இந்துக்களெனப்பட்டனர். இவர்கள் மதத்திற்கும் இந்துமதம் என்று பெயர் வழங்குகின்றது.

இவ்விந்து மதத்தின் ஒரு பகுதியாயிருப்பது நமது வீரசைவ சமயமாகும். இவ்வீரசைவ சமயம் முற்காலத்தில் ○ உலகெங்கும் (ஐந்து கண்டத்திலும்) வியாபித்திருந்தது என்பதற்கு ஸ்ரீரேணுகாதி பஞ்சாசாரியர்களால் இன்னும் காணப்படும் சிவாலயங்களே சான்று

○ உத்திர ஆப்பிரிக்கா கண்டத்துள் ஈஜிப்ட் தேசத்திலுள்ள மெம்பீஸ் க்ஷேத்திரத்தில், நந்திவாகனன் திரிசூலம் சர்ப்பவாக்ர சர்ப்பாம்பரதாரியான பரமேஸ்வர விக்ரஹம், பாபிலோன் பட்டணத்தில் 1200 அடி உயரமுள்ள சிவலிங்கம். ஹைட்ரோபோலீஸ் என்னும் பட்டணத்தில் 600 அடியுள்ள சிவலிங்கம். மெக்காவில் ஸகமக்கேஸ்வர நாமமுள்ள ஒரு சிவலிங்கமும், ஸம்ஸம் என்னும் கிணற்றில் ஒரு சிவலிங்கமும் இருக்கின்றன. ப்ரஜில் தேசத்தில் அநேக சிவலிங்கங்கள் விக்நேஸ்வர முகூர்த்தங்கள். காரிம்த் பட்டணத்தில் பார்வதிதேவியின்ஆலயம். கிளாஸ்கோவில் சுவர்ண கவசத்தினுல் போர்க்கப்பட்ட ஒரு சிவலிங்கம். பிரீஜியன் தேயத்தில் ஏடன் என்னும் சிவலிங்கம், வினிபா, யகோதி, சித்ரால், காபூர், பலக், புகார் முதலான இடங்களில் அநேக சிவலிங்கங்கள் அங்குள்ள ஜனங்கள் பஞ்சாக்ஷர பஞ்சவீர என்னும் பெயரால் அழைத்து அர்ச்சித்து வருகின்றுர்கள். மற்றும் அண்டாண்டங்களிலும் இலங்கை முதலிய தீபாந்திரங்களிலும் ஸ்ரீஜகத்குரு பஞ்சாசாரியர்களினுல் கோடிக்கணக்கான லிங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

கின்றன. மேலும் இச்சமயம் அநாதியாயுள்ளது என்பதனை சுருதி, ஸ்மிருதி, உபநிஷத்து, இதிகாச புராணுகம பாஷியாதி கிரந்தங்களே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காண்பிக்கின்றன. இச்சமயம் தற்போது சுருங்கிய வியாபகத்தையுடையதாயிருப்பதுடன் எந்த அரசராலேனும், ஜனத்தலைவராலேனும் பரிபாலிக்கப்படாமல், மாலுமியில்லா மரக்கலம்போல் நிலைகுலைந்திருக்கின்றது. இதனால் வீரசைவ சமயத்திற் பிறந்தோர் தங்கள் சமய உண்மைகளை அறியாது சமயக் குருடராய் நித்திய நைமித்திய கருமங்களையும், அஷ்டாவரண பஞ்சாசார சதுர்சஷ்டி சீலங்களையும் கைவிட்டிருப்பதோடு இகழவும் முற்படுகின்றனர். இதற்குக் காரணம் வீரசைவ உண்மைகளை ஆராய்ந்தறியாமையேயன்றி வேறில்லை.

வீரசைவ சமயமானது, உலகில் மிகவும் சுருங்கிய வியாபகமுடையதாயிருத்தல் அதன் சிறப்பினாலேயன்றி பிறிதொரு காரணத்தாலன்று. உலக முழுவது நிலமயமாயிருப்பினும் அதில் ஒரு பாகம் ஒன்றும் விளையாதபாலை மற்றொரு பாகம் காடடர்ந்த முல்லை. வேறொரு பாகம் சமுத்திரத்தையடுத்த நெய்தல். பிறிதொரு பாகம் மலைகள் நெருங்கிய குறிஞ்சி. இன்னொரு பாகம் நாடு நகரங்களடங்கிய மருத நிலமுமாயிருக்கும். மருத நிலத்திலும் நன்செய், புன்செய் நிலங்களும் மயான பூமி முதலியனவும் இருக்கும். இவற்றுள் நன்செய் நிலத்தில் மாத்திரம் சிறந்த செந்நெற் பயிர் விளையுமேயன்றி மருத நிலத்தின் வேறிடங்களிலாவது, பாலை முதலிய நிலங்களிலாவது விளையாது. அவ்வாறு விளையாமையால் நெற்பயிரை இகழ்வாரில்லை. அதுபோல் வீரசைவ சமயம் இப்பரத கண்டத்தில் மாத்திரம் வியாபித்திருப்பதுபற்றி அதன் உண்மைகளை யுணர்ந்த மேலோர் அதனை இகழார். உலகத்திலுள்ள ஆசியா முதலிய ஐந்து கண்டங்களும் மருத முதலிய ஐவகை நிலங்களுக்கொப்பாகும். எல்லா மதங்கட்கும் பிறப்பிடமாகிய ஆசியா கண்டம் பல பயிர் விளையும் மருத நிலத்தை யொக்கும். ஆசியாவிலுள்ள பரதகண்டம் மருத நிலத்திலுள்ள நன்செய் நிலத்தை நிகர்க்கும். வீரசைவ சமயம் பரதகண்டமாகிய நன்செய் நிலத்தில் விளையும் செந்நெற் பயிரை மானும். வீரசைவமாகிய செஞ்சாலிப்பயிர் சீவகாருண்யம், கொல்லாமை, புலாலுண்ணாமை, கற்பு முதலிய உத்தமோத்தம குணாதிகள் பாயும் பரதகண்டமாகிய நன்செய் நிலத்திலன்றி வேறு புலத்தில் விளையாது. ஆதலாற்றான் இப்பரதகண்டம் புண்ணிய பூமியெனப் புகழப்பெற்றது.

இதுவரையில் கூறியவாற்ருல் வீரசைவம் உலகமெங்கணும் வியாபித்திராததுபற்றி அதனை இகழ்ந்து கைவிடலாகாதென்பது விளக்கமுறும். வீரசைவ சமயமானது மற்றெல்லாச் சமயங்களையும் தனக்குச் சோபானமாகக் கொண்டு அவற்றிற்கெல்லாம் நாயகமும் தாயகமுமாய் இராஜாங்கத்தமர்ந்த சமயமாகும். இம்மஹா வீரசைவ பிண்டனுதல் பண்டு ஓராயிரம்பிறவியிற் செய்த புண்ணியத்தால் சித்தித்தல்வேண்டும். மனமொழி மெய்களாற் சிவநெறியொழுகி வீர சைவ சித்தாந்த சாத்திரங்களையோதி யுணர்ந்தார்க்கே இவ்வுண்மை விளங்கும்.

முற்காலத்தில் நம்முன்னேர்களாகிய வீரசைவ உழவர்கள் பாட சாலைகள், ஆலயங்கள் முதலிய பாத்திகளைக்கோலி வேதாகம புரா ணங்களாகிய களஞ்சியங்களிலிருந்து சமயபோதனை என்னும் விதையை வாரி யிறைத்து பரதகண்டமாகிய நன்செய் நிலமெங்கும் இமசேது பரியந்தம் வீரசைவப் பயிரை விளைவித்து உலகத்தாருக்கு சிவபோகத்தை யுண்பித்தார்கள். பிற்கால வீரசைவ உழவர்கள் அவ்வாறு செய்யாமல் வாளாவிருந்து விட்டதனுல் பரதகண்டமாகிய நன்செய் நிலம் புன்செய் நிலமாகமாறி புறச்சமயக்காடுமூட கொலை, புலை, மதுபானம்,வியபிசாரம் முதலிய துர்க்குணங்களாகிய தீயவிலங்கு கள் வசிக்கும் இடமாய்விட்டது. இனி இக்காட்டை வெட்டிச்சுட்டு, பண்டுபோலாகத் திருத்தி, வீரசைவப் பயிர்செய்தல் எளிதன்று. நம்முன்னேர்கள் உடையைத் துறந்தும், உண்ணுதொழிந்தும், கண்ணையிழந்தும், காலை வெட்டியும், மிகவும் பாடுபட்டு நமக்கெனத் தேடிச் சேமித்து வைத்த நூல்களாகிய நெற்போர்கள் பலவேற்றரசர் களால் எரிக்கு இரையாக்கப்பட்டன. பல பாதுகாப்பின்றி அசாக் கிரதையாகிய அந்துப்பூச்சிக்கிரையாயின. எஞ்சி நின்றனவெல்லாம் அவைதிக நூல்களாகிய பதர்களோடு கலந்து மாறிவிட்டன. சேர, சோழ, பாண்டியர்களாகிய நதிகள் வறண்டுதிடலாயின. மடங்களா கிய ஏரிகள் இரண்டொன்றைத் தவிர பெரும்பாலும் விழலுக்குப் பாய்கின்றன. உழவர்களாகிய நமக்கு தரித்திரம் என்னும் நோய் அதிகரித்திருக்கிறது. நம்முடைய பங்காளிச் சைவ உழவர்களோ நம்முடன் முரண்பட்டனர். இவர்கள் தாமும் உழுது பயிர்செய்ய மாட்டார்கள், நம்மையும் பயிர்செய்யவிடார்கள். நம்முடைய உறவி னரோ சிலர் பரமலோபிகளாய் பணப்பெட்டியின்மேல் ஓரே படுக் கையாய்ப் படுத்துக்கொண்டிருக்கின்ருர்கள். சிலர் முழுக்குருடராய்

நம்முடையநிலைமையை எவ்வளவு எடுத்துக்காட்டினாலும் பார்க்கமாட்டாதவர்களாயிருக்கின்றார்கள். சிலர் பிணச் செவிடராய் நாம் எவ்வளவு ஊரத்துக்கூவினாலும் கேளாமலிருக்கிறார்கள். சிலர் வீரசைவப் பயிர் செய்வதாக நடித்துப் புறப்பட்டு பிறகு நம்மினவர்க்கு நாமஞ் சாத்துகின்றார்கள். சிலர் சுயநலப்பிரியராய் எது எக்கேடு கெட்டாலும் நமக்கென்னவென்று தங்கள் வரையில் உண்பதும் உடுப்பதுமாய் எட்டி பழுத்தாற்போல் இருக்கின்றார்கள். சிலர் தாசிக்கும், வேசிக்கும் பாங்குகளுக்கும், லாட்டரி சீட்டுகளுக்கும் நம்பி எவ்வளவானாலும் கொடுப்பார்கள். நம்மை நம்பி ஒரு காசும் கொடார். நம்முடைய உறவினர் இவ்விதமாய் இருத்தலால் பண்ணையாட்கள் கூட்டம் கூட்டமாகவும் கிராமங்கிராமமாகவும் அயலாருக்கு அடிமையாகிறார்கள். பழைய எழுத்தாணிக் கலப்பைகள் மிகவும் துருப் பிடித்துக் கூர் மழுங்கிப் பயனிலவாயின. இவ்வளவு சீர் கேடும் ஆபத்துமான நிலையில் நாம் வீரசைவப்பயிர் செய்யமுயல்வது பகீரதப் பிரயத்தனமாகும். ஆயினும் நாம் சும்மா இருக்கமுடியாது. ஆதலால் அங்குமிங்கும் காதத்துக்கொருவராகச் சிதறுண்டு இலைமறைகாய்போல் மறைந்திருக்கும் உண்மை வீரசைவாபிமான சீலர்களாகிய நமது சகோதர வீரசைவ உழவர்களே! வெளிப்பட்டு வாருங்கள்! வாருங்கள்! யாவரும் விரைந்து வீரசைவ சித்தாந்த திருக்கூட்டமாகிய செந்நெற் களத்தில் வந்து கூடுங்கள்! கூடிச்சுகிக்கும் வழியை நாடுங்கள்! நாடுங்கள்!

நம்முன்னோர்கள் சேமித்துவைத்த நூல்களாகிய நெற்போர்கள் பெரும்பாலும் அழிந்துபோனாலும் எஞ்சி நின்றவற்றுள் அவைதிக நூல்களாகிய பதர்களோடு கலந்து உருமாறியிருந்தனவற்றை நமது ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் ஸ்ரீபதி பண்டிதர் சோமனாதாராத்தியர் முதலான தெய்வீக உழவர்கள் திருவருளாகிய காற்றில் தூற்றி அப் பதர்களை யகற்றிச் சுத்தப்படுத்தி வேதாகமசாரமாய் விளங்கும் வீரசைவ சித்தாந்த உண்மைகளாகிய நெல் மணிகளைச் செந்நெற் கூடுகளிலிட்டு ஸ்ரீஇரேணுகாதி பஞ்சாசாரிய முத்திரையிட்டு வைத்திருக்கின்றார்கள். இவைகள் ஒருபோதும் கெடுவதின்று. இந்நெற்கூடுகள் நம்மிடத்திலிருக்கின்றன. நமது முதலாளி சிவபெருமான் அவரிடம் வேற்றுமையின்றி உறவாடும் உறவோர்க்கு எதையும் இல்லையென்னாது கொடுப்பவர். அவர் மனைவியாரோ இன்னும் கன்னியாகவே இருந்தாலும் அளவற்ற குழந்தைகளைப்பெற்று வளர்ப்பவர். அறப்

பெருஞ்செல்வி. நமது முதலாளி இந்தம்மையார் ஆட்டுகிறபடியே ஆடுகிறவர். அவருக்கு மனமிரங்காவிட்டாலும் இந்த அம்மையாரைக் கொண்டு மனமிரங்கப்பண்ணலாம். அன்றியும் இரண்டு திருக்குமாரர்களிருக்கிறார்கள். நமது கோத்திரத் தலைவர் நந்தியுமிருக்கின்றார். போஷகர்களாகிய ஸ்ரீபஞ்சாசார்ய பீடங்களுமிருக்கின்றன. உதவியாளர்களாகிய வீரசைவத்துறவாச்சிரம நிலையினரும், அநேக சாஸ்திரியுமிருக்கின்றார்கள். ஸ்ரீகாசிநாத சாஸ்திரி என்னும் புயல்பிரசங்கமென்னும் மழையைப் பெய்கின்றது. நம் சகோதர உழவர்களே! அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை. நம்மிடத்திலிருந்த பழைய எழுத்தாணிக்கலப்பைகளால் இப்போது பயனில்லாவிட்டாலும் புதுமாதிரிப் பேனாக்கலப்பைகளும், அச்சுக்கலப்பைகளும் நமக்கு எங்கும் கிடைக்கும் இதைக்கொண்டு நாம் சலியாமற் பாடுபட்டு வீரசைவப்பயிர்செய்து நினைக்குந்தோறும் கேட்குந்தோறும் எப்போதும் என்புருகப் பரமானந்தத் தேன்சொரியும் சிவபோக அமுதுண்டு சுகித்து வாழலாம் வந்து சேருங்கள். வந்துசேருங்கள்.

பிற சமயத்தவர்களுடைய கூட்டுறவு எங்கும் நிரம்பி இருக்கின்றது. ஆதலால் வீரசைவ உண்மைகளைக் காலதேசவர்த்தமானங்களுக்கிசையப் போதித்தாலன்றி இவர்கள் வீரசைவ நித்திய நைமித்திய கர்மாக்களை அனுட்டிக்கமாட்டார்கள். இதனை யுணர்ந்த வீரசைவாபிமானிகள் சிலர் இப்போது வீரசைவ சித்தாந்த சாத்திரங்களை யச்சிட்டும், ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், பகிரங்கமாகப் பிரசங்கித்தும், பத்திரிகை வாயிலாக வெளியிட்டும், வீரசைவாபிவிருத்தி செய்யத் தலைப்பட்டார்கள். ஆயினும் பல பாடைகள் கற்ற சிலருக்கேயன்றி மற்றவர் பலருக்கும் பயன்படுமாறு மிகவும் எளிய வசன நடையில் தமிழில் வெளிவரும் பத்திரிகைகள் இல்லாமையால் இறைவன் திருவருளால் இக்குறைவை ஒருவாறு நீக்கக்கருதி தமிழ் நாட்டு வீரசைவ சித்தாந்த மஹா சங்கத் திருக்கூட்டத்தினர் இப்பத்திரிகை வாயிலாக வீரசைவ சித்தாந்த உண்மைகளை மிகவும் எளிய தமிழ் நடையில் எழுதி வெளியிடத்துணிந்து முன்வந்துள்ளார்கள். இப்பத்திரிகை மாதம் ஒருமுறை தவறாது வெளிவரும். இப்போது சுமார் 500 சந்தாதாரர்கள் சேர்ந்துள்ளார்கள். சிலர் ஆயுட் சந்தாவும் சிலர் வருடச் சந்தாவும் கொடுத்து பத்திரிகைகள் வாங்கிவருகின்றனர். சிலர் தனிக்காப்பியும் வாங்கிவருகின்றனர். சந்தா அதிகப்படுந்தோறும் இப்பத்திரிகை மாதம் இருமுறை, வாரம் ஒருமுறை

யாகவும் வெளியிடக்கூடும். நமது வீரசைவ உத்கிரந்தங்களையும் அச்சிட்டு சுலப விலைக்கு அளிக்கக்கூடும். இதற்கோர் அச்சியந்திர சாலை நம்மவர்க்கென்று ஒன்று இருப்பது அவசியம். இவ்வளவு நாகரீகமமைந்த காலத்தும் பழமைபோல் சுபகாரியத்தில் வெறும் பாக்கு வெற்றிலை வைத்தழைத்தலை விட்டு அதன்மேல் அழகமைந்த ஸ்ரீபஞ்சாசாரியரின் திருவுருவத்தோடு கூடிய அச்சிட்ட திருப்பத்திரிக்கையை வைத்தழைக்க அச்சியந்திரசாலை உரிமையைப் பெற வேண்டும். இப்பத்திரிகை இனி நமது ஜகதாசாரியர் துணைவலி கொண்டு நம்மால் வீரசைவ வைதீகத்துவம், சிவலிங்கதாரண வைதீகத்துவம், அஷ்டாவரண வைதீகத்துவம், வீரசைவ பூர்வ உத்திர கர்மாக்களின் வைதிகத்துவம், பஞ்சசூதகம், பஞ்சாசாரம், சதுர்சஷ்டி சில சம்பன்ன விஷயம், சக்தி விசிஷ்டாத்வைத பாஷ்யம் முதலிய விலைமதிக்கப்படாத ரத்தின ஆபரணங்களைப் பூண்டு வெளிவரும். ஆதலால் வீரசைவர்களும், வீரசைவாபிமானிகளும், பலரும் இப்பத்திரிக்கையை வாங்கிப்படித்தும், பிறரை வாங்கிப்படிக்கச் செய்தும், வறுமை, உலோப குணம், அசட்டையால் வாங்கிப் படிக்காதவர்களுக்கு வாங்கிக்கொடுத்தும் கூடுமானவர்கள் இச்சபையின் அங்கத்தவர்களாக இருந்து இயன்ற உதவிகளைச் செய்தும், வீரசைவ பரிபாலனம் செய்யும் வண்ணம் பிரார்த்திக்கின்றேன்.

சிவம்.

பஸ்மதாரணம்.

ஆஸ்தான வித்வான் வே. சிரசி. குருசாந்த சாஸ்திரிகள்
(பஞ்சாசாரியப் பிரபா ஆசிரியர்)

விபூதிர்யஸ்யகோபாலே கண்டேருத்ராக்ஷமாலிகா
முகேபஞ்சாக்ஷரோமந்த்ரஸ்தந்தியஜேதந்தியஜம்யதா .

எவனுடைய நெற்றியின்கண் பஸ்மம் இல்லையோ, கண்டத்தில் உருத்திராக்ஷமாலிகை இல்லையோ, முகத்தில் பஞ்சாக்ஷர மந்திரம் இல்லையோ அவனைக் கடைப்பிறப்பாளனென்று விலக்கவேண்டுமென

வேதாகமங்கள் நிஷேதிக்கின்றன. "**திரிபுண்ட்ரம்பஸ்மநாகரோதியோவித்வான்ப்ரம்ஹசாரிக்ரஹீவானப்ரஸ்தோயதிர்வா; ஸமஸ்தபாதகோபபாதகேப்ய: பூதோபவதி; ஸஸர்வாந் தேவாந் த்யாதோ பவதி; ஸஸர்வேஷு தீர்த்தேஷு ஸ்நாதோபவதி.**" எவனொருவன் பஸ்மத்ரிபுண்டரத்தை எப்பொழுதும் தரித்திருக்கின்றானோ அவன் வித்வானாகுக, அல்லது பிரமசாரியாகுக, அல்லது கிருகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நியாசியாகுக ஒவ்வொருவனும் சர்வபாபங்களினின்றும் உபபாபங்களினின்றும் விடப்பட்டவனாவதேயன்றி எல்லாத்தேவர்களையுந் தியானித்தவனாயும், எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடினவனாயும் ஆகின்றானென்று காலாக்நி ருத்திரோபநிஷத்தின்கண் பஸ்மதாரணத்தின் பயன் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்படி வேதோக்தமான விபூதிதாரணம் என்ற விதி நித்திய விதியாயிருத்தலின் வீரசைவ மதத்தை மேற்கொண்டவர் யாவரும் **சிரம், நெற்றி, இரண்டு காது, கழுத்து, இரண்டு புயங்கள், மார்பு, நாபி, முதுகு, இரண்டு கைகள், பிடரி, இரண்டு முன் கைகள் என்ற பதினைந்திடங்களில்** விதிப்படி அந்தந்த மந்திரங்களினால் தரித்தல் வேண்டும். "**மத்யாங்குலித்ரயேணைவஸ்வதக்ஷிண கரஸ்யது, ஷடங்குலாயதம் மானமபிவாளிகமானகம், நேத்ரயுக்மப்ராமாணேன பாலேதத்யாத்ரிபுண்ட்ரகம்.**" பெரிய விரல் சுண்டு விரல்களை விட்டு மற்ற மூன்று விரல்களினால் ஆறு அங்குல அளவினவாகவும் விளக்கமாகவும் பஸ்மத்தைத் தரிக்கவேண்டுமென்று இரேணுக பகவத்பாதர் பஸ்மதாரண விதியை சித்தாந்த சிகாமணியின்கண் அகத்திய முனிவர்க்குப் போதித்திருக்கின்றாரே. இப்பொழுதோ வீரசைவர்களில் விபூதிதாரணத்தில் பக்தியுள்ள அநேகர் எந்தெந்த விரல்களினால் எந்தெந்த மந்திரங்களினால் எந்தெந்த விடங்களில் எவ்வளவு அளவினதாகத் தரிக்கவேண்டுமென்ற ஞாபகமேயில்லாமல் மூடபக்தியினால் இச்சைப்படி விபூதியைத் தரிக்கின்றார்கள். இப்படிச் சாஸ்திர நியமத்தைக் கடந்து விபூதிதாரணஞ்செய்து கொள்வதனால் இலாபமில்லாத வியாபாரத்தைப்போல பயனற்றதாகின்றது. வீரசைவப் பெண்களுள் அநேகர் கல்வியறிவில்லாமையால் விபூதிதாரண விதியை அறியாமல் நியமமின்றி இரண்டு விரல்களினாலும் ஒரு விரலினாலும் அணிகின்றார்கள். விதியறிந்து ஸ்நானாதி

களினால் பரிசுத்தராகாமலும், ஆசனத்தின்மேல் உட்காராமலும் இஷ்டப்படி நின்றேனும் உட்கார்ந்தேனும் மந்திர சூன்யமாகக் கிரமந் தப்பி விபூதியைத் தரித்துக்கொள்ளும் கெட்ட பழக்கமுமுண்டு. அன்பர்களே! சாஸ்திர விதியை அனுசரித்து விபூதியைப் பூசித்து அதற்குப் பிரணவ சம்பந்தஞ்செய்து முதலில் பஸ்ம ஸ்நானஞ் செய்து அதன்மேல் பஸ்மத் தூளனத்தைச் செய்து பின்னர் 15 இடங்களில் திரிபுண்டரத்தைத் தரிக்கவேண்டும். இம்மூன்றில் பஸ்ம ஸ்நானத்தினும் பஸ்மத் தூளனம் சிறந்த பலனைத்தருவது. பஸ்மத் தூளனத்தினும் திரிபுண்டர தாரணம் சிறந்த பலனைத் தருவதென்று சித்தாந்தத்தின்கண் சொல்லப்பட்டிருத்தலினால் விபூதித் திரிபுண்டரத்தை காலை நண்பகல் மாலையென்ற இம்மூன்று காலங்களினும் முறைப்படி தரித்துக்கொண்டிருப்பது வீரசைவருக்கே முக்கிய தருமமாகின்றது. முக்திக்குத் தாயகமாயும், பாபத்தைப் போக்குவதாயும், அழகுக்குப் பிறப்பிடமாயும், ஆரோக்கியத்திற்குத் துணையாயும் இருக்கின்ற விபூதி விஷயத்தில் யாருக்கு அலக்ஷிய புத்தியுண்டாகின்றதோ அது அவரது பாபகர்மத்தின் பலனென்றே சொல்லுதல்வேண்டும். இதல்லாமல் வீரசைவர்கள் தங்கள் குழந்தைகளை ஆடையணிகளால் அலங்கரித்து தங்கள் மதத்தின் முக்கிய குறியாகிய திரிபுண்டரத்தினால் நெற்றியை அலங்கரிக்காமல் தரிக்கத் தகாத கறுப்புப் பொட்டு முதலியவற்றால் அலங்கரிப்பது தலையின் மேலிருக்கும் சிகையை எடுத்துவிட்டு வைக்கோல் புரியினால் சுற்றுவது போலாகின்றது. நமது பரதக்கண்டத்தில் அநேக பூர்வாசாரியர்கள் வேதாகமப் பிரமாண ஆதாரங்களின்மேல் அநேக மதங்களைத் தாபித்திருக்கின்றார்கள். ஒவ்வொரு பூர்வாசாரியரும் தாம் தாபித்த மதங்களை ஏற்றுக்கொண்டுள்ள மனிதர்களிடத்தில் ஒவ்வொரு உயர்ந்த குறிகளைக் கற்பித்திருக்கின்றார்கள். அந்தந்த உயர்ந்த குறிகளைக் கண்டமாத்திரத்தே இவர் சிவாராதகர் என்றும், இவர் விஷ்ணுவின் ஆராதகர்என்றும் யாரிடத்துங் கேளாமலேயே உடல் தானாகவேகாண்பிக்கின்றது. ஊர்த்துவத்திரிபுண்டரம் ஸ்ரீ வைஷ்ணவமதத் தாபகராகிய இராமாநுஜாசாரியருடைய புகழ்க்கொடியை ஞாபகப்படுத்துகின்றது. சங்காதி முத்திரைகள் வைஷ்ணவமதத் தாபகராகிய மத்துவாசாரியருடைய கீர்த்திக்கொடியைக் குறிப்பிடுகின்றது. பஸ்மத்திரிபுண்டரம் சைவமதத் தாபகராகிய ஸ்ரீ ரேணுகாதி பஞ்சாசாரியர்களுடைய கீர்த்திப்பதாகையை கம்பீரத்துடன் ஞாபகப்படுத்துகின்றது.

பூர்வாசாரியர்கள் உலகத்தோற்றத்திற்குக் காரணரான கடவுளிடத்து மனிதர்களெல்லாம் சேரவேண்டுமென்பதொன்றையே முக்கியத் தியானமுள்ளவராயிருந்தமையாலும், தியானவஸ்த்வைக்கியமான முத்தி மார்க்கங்கள் பலவிதங்களாயிருக்கின்றமையாலும், அந்தப் பிராணிகளுடைய வினைக்கீடாக முயற்சிக்குத் தக்கவாறு ஒவ்வொரு மார்க்கத்தில் ஒவ்வொருவர்க்கு விசேஷ விருப்பமிருப்பதாலும், ஒவ்வொரு பூர்வாசாரியர் ஒவ்வொரு உபாசனைமார்க்கத்தைத் தாபித்து தத்தம் மதங்களுக்கே ஒவ்வொரு உயர்ந்த குறிகளை நியமித்திருக்கின்றார்கள். அந்தக்குறிகளைக் கண்டமாத்திரத்தே இவர் இந்த ஆசார்யசாம்பிரதாயகர் என்று கண்டுகொள்ளத்தக்கதாகின்றது. ஒவ்வொரு மகாராஜன் அகண்டமான வுலகத்தில் ஒவ்வொருபாகத்தை ஆளுகின்றான். அந்தந்த மகாராஜனுடைய பிரதிநிதிகளாயுள்ளவர் தங்கள் அரசனால் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு சிறந்த அடையாளத்தைத் தரித்துக்கொண்டிருத்தல்வேண்டும். யார் ஓரரசனுடைய அடையாளத்தைத் தரிக்கவில்லையோ அவரை இன்ன அரசனுடைய பிரதிநிதியென்று தெரிந்துகொள்ளமுடியாது. ஓர் அரசனுடைய அடையாளத்தைக்கண்டு இன்ன அரசனுடைய ஆளுகையைச்சேர்ந்தவரென்று தெரிந்துகொள்வதுபோல, பூர்வாசாரியர்கள் தத்தம்மதத்தினர் நெற்றியில் இந்தசின்னத்தைத் தரிக்கத்தக்கது இப்படித் தரிப்பவரே இத்தகைய மார்க்கத்தைச் சார்ந்தவரென்று ஒரு நியமித்தமார்க்கத்தை நிலைநாட்டியிருப்பதால் அந்தந்த சாம்பிரதாயகர்கள் எல்லாம் தங்கள் தங்கள் பூர்வாசாரியர்களுடைய ஆணையை இகழாது தத்தம் மதத்தின் அடையாளக் குறியை நெற்றியின்கண் தரித்திருப்பது ஆஸ்திகருடைய தர்மமாகின்றதென்றும், வீரசைவ மதத்தாபனாசாரியர் நெற்றியின்கண் பஷ்மத்திரிபுண்டரத்தை இடவேண்டுமென்றும், யார் பஸ்மத்திரிபுண்டரத்தைத் தரிக்கின்றனரோ அவரே சிவோபாசனைக்கு அதிகாரிகளென்றும், பஸ்மத் திரிபுண்டரம் அதிரகசியமான இலிங்காங்க சாமரஸ்ய வைபவத்தைத் தெரிவிப்பதென்றும் நியமித்திருப்பதால் ஒவ்வொரு வீரவைச மதத்தினராகிய சிறுமி சிறுவன் ஆண் பெண்பாலர் யாவரும் நெற்றியின்கண் விபூதித் திரிபுண்டரத்தை விதிவழுவாமல் எப்பொழுதும் தரித்து ஸ்ரீ பகவத் பாதருடைய ஆசிர்வாதத்திற்குப் பாத்திரராக வேண்டுமென்று கோருகின்றேன்.

ஸ்ரீபசவேச விஜயம்.

திருவாளர், G. C. வீரப்பா B.A., L.L B., அவர்கள்,
டெங்கணிக்கோட்டை.

(முன்தொடர்ச்சி)

இளமைப் பருவமும் இன்னுயிர்க்கிரங்கலும்.

பசவேசர் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துவந்தார். நெடுநாளாகப் புத்திரப்பேறின்றித் தவங்கிடந்து அரிதிற்பெற்றெடுத்த தாய் தந்தையர் ஏழையாகிய ஒருசெய்நிலத்தையுடையோன் அச்செய்யின் விளைவை நோக்கிப் பாதுகாப்பது போலவும், கல்வியின் விருப்புடைய மாணவன் பழம்பாடங்களைப் படித்துப் போற்றுதல் போலவும், செங்கோல் மநுவேந்தன் உலகத்தையாளும் முறைபோலவும் கண்ணுங்கருத்துமாக வளர்த்துவந்தனர். வெயிலால் உலர்ந்து போவனோ எனப் பெற்றோர் வெளியில் விடாராயினும் பசவேசர் தோழர்களுடன் வனத்திற்கு அடிக்கடிப்போய் விடுவார். அவ்வனத்தில் தோழர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது தாம் மாத்திரம் செடி மலர்களின் அழகு வளர்ச்சி முதலியவற்றைப்பார்ப்பதிலும், மயில் கோகிலம் குருவி முதலிய பறவைகளின் இயற்கைத் தன்மையை உற்றுப்பார்ப்பதிலும், ஊக்கமுடையவராயிருப்பர். தினந்தோறும் தமக்குக் கொடுக்கும் தின்பண்டத்தை மீதிவைத்து பறவை முதலிய பிராணிகளுக்குப்போட்டு வருவார். எறும்புகளைக் கண்டால் எவ்விடத்திலிருந்து அவைகள் ஒன்றன்பின் ஒன்ருய்த் தொடர்ந்துவருகின்றன என்பதைப் பார்க்க அவைகளைப் பின்பற்றிச் செல்வார். தக்க சமயத்தில் சோம்பலாய் வீண் காலங்கழிக்காமல் மழைக்காலத்திற்கு வேண்டிய வுணவைச் சேகரிக்கும் ஒவ்வொரு எறும்பின் சுருசுருப்பைப் பார்த்து பசவேசர் வியப்படையாமலிரார். தாமும் சர்க்கரை வெல்லம் முதலியவைகளை அவ்வெறும்புகள் உணவைத் தேடிச்செல்லும் வழியில் போட்டு வருவர். ஆயிரக்கணக்கான எறும்புகள் அவ்வுணவுப்பொருள்களைக் கொண்டுபோய்த் தம்மிருப்பிடஞ் சேர்த்துவருவதைப் பார்த்துக் கொண்டு எவ்வளவு நேரமானபோதிலும் உட்கார்ந்திருப்பார்.

ஓர் நாள் தோழர்களுடன் சேர்ந்து மாமரச் சோலைக்குச்சென்றனர். மரங்கள் உயர்ந்து வளர்ந்திருந்தன. அச்சிறுவர்களால் முயன்றும் பழங்களைப் பறிக்க முடியவில்லை. கல்லாலடிக்கவும் முயன்றனர். அம்முயற்சியும் பயன் தராமையால் களைப்புற்றனர். ஆயினும் நீலகண்டன் என்னுஞ் சிறுவனுடைய கல்லால் மாத்திரம் ஓர் நேர்த்தியான பழம் விழுந்தது. மற்றச் சிறுவர்களும் அதை இச்சித்தோடினர். நீலகண்டன் அப்பழத்தை விரைந்தெடுத்து யாருக்குங் கொடாமல் வாயாற் கடித்துக்கொண்டான். சிறுவர்களோ ஏங்கித் திகைத்து நின்றனர். அதைக்கண்ட பசவேசர்க்கோ மனம் புண்பட்டது; கோபமூண்டது; ஆனால் அவர் அதனை வெளிப்படுத்தாது அடக்கி மௌனமாயிருந்து விட்டனர். மறுநாள் எல்லோரும் வழக்கப்படி வெளிக்கிளம்பினர். உய்யான வனத்திற்குப் போகலாமென்றார். பசவேசர் இல்லை மாந்தோப்புக்கே போகலாமென்றார். அப்படியே சென்று நேற்றுப் பழங்கொடுத்த மாமரத்தின் கீழ் எல்லோருமாக உட்கார்ந்தனர். நீலகண்டனை மாத்திரம் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டார். அங்கு ஓர் காகம் மரத்தை நோக்கி வருவதைக்கண்டு தம்மிடமிருந்த தின்பண்டத்தை அது காணும்படி போட்டார். அக்காகம் உடனே கா. கா. கா. எனக்கரைந்தது. சுற்றிலுமிருந்த காகங்களெல்லாம் ஒருங்கே வந்து பசவேசர் போட்டுக்கொண்டிருந்த தின்பண்டத்தை சண்டை சச்சரவின்றி உட்கொண்டிருந்தன. அப்பொழுது பசவேசர் பக்கத்திலிருந்த நீலகண்டனையும், மற்றத் தோழர்களையும், மாமரத்தையும் பார்த்துச் சிறித்தனர். தோழர்களும் நகையாடினர். நீலகண்டன் மனம் மாத்திரம் சிறிது வாடினாற்போல் புலப்பட்டது. பசவேசர் நீலகண்டனுக்குத் துன்பத்தை விளைவித்தேனேயென்று அவனைக் கட்டியணைத்து மன்னிக்கும்படி வேண்டினர். அப்பொழுது நீலகண்டன் அவரை நோக்கி அன்புக் கடலான உன்மேல் எனக்கு எப்படி வருத்தமுண்டாகும்? நான் மாம்பழத்தை மற்றத்தோழர்களுக்குங் கொடுக்காமல் துராசையாற் கவர்ந்துண்ட தப்பிதத்தை நினைத்து அந்தக் காக்கைக்குள்ள நற்குணமும் என்னில் இல்லையே என்று வருத்தப்படுகிறேன். நேற்றே உன் முகத்தின் கோபக்குறியைக் கண்டேன். என்னைக் கண்டித்துப்பேசுவாய் என்று நினைத்தேன். ஆனால் அப்படி என்னைச் செய்திருந்தால் உன்னுடைய நட்பையே விட்டுப்போயிருப்பேன். அப்படிச் செய்யாது இன்று ஓர் உபாயத்தால் எனக்கு நற்புத்தியைக் கற்பித்தாய்! என்று தன் குறையைத் தானே தெரிவித்து நின்றான்.

பின்னர் எல்லோருமாக முன்னுக்குச் சென்றனர். அங்கிருந்த மனோகரமான பலாமரச் சோலையைக் கண்டனர். அச்சோலையில் குரங்குகள் குட்டிகளுடன் விளையாடிக்கொண்டிருந்தன. அங்கோர் குரங்கு ஓர் மரத்தில் அழகாய்ப் பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்த பழத்தைப் பறித்து வீழ்த்தியது. யாதொரு முயற்சியுமில்லாம லிருந்த மற்றொரு குரங்கு திடீரெனப் பாய்ந்து வீழ்த்திய குரங்கை அடித்துத் துரத்திவிட்டு அப்பழத்தைப் பகிர்ந்து தன் மனைவிமக்க ளாகிய குரங்குகளுடன் உண்ண ஆரம்பித்தது. அப்பொழுது அவ் வனங்காப்பாளன் ஓர் கோல் கொண்டடித்து அவற்றைத் துரத்தி விட்டு யாதொரு பிரயாசையுமின்றி அப்பழச் சுளையை உண்ணலா னான். அதனைக்கண்ட பசவேசர் பதைபதைப்புற்று இதுவோ உலகி யற்கை! ஒருவர் பொருளைப் பிறர் கவர்வதும், முயன்று தேடியவர் பொருளை சோம்பேறிகளாயிருப்பவர் உண்பதும், எவராயினும் தம் பொருளைத் தம்மினும் வலியாரிடம் கொடுத்து ஏங்கி நிற்பதும் உண்மையென இக்குரங்குகள் நமக்குணர்த்தலாயின எனத் தம் தோழர்களுடன் கூறிப் பற்றற்றமனமுடையராய் விளையாடிக்களைத்து வீட்டுக்குவந்தார்.

நந்தனவனத்திற்குப் போம்பொழுதெல்லாம் நறுமணம் வாய்ந்த மலரை எடுத்துவந்து தேவாலயத்திற்குள் சென்று ஒருபாகத்தைக் கடவுளுக்குச் சமர்ப்பித்து மற்றொரு பாகத்தைக் கொண்டுவந்து தன் பால் உயிரைவைத்துள்ள தாயாராகிய மாதாம்பிகையாரிடங் கொடுப் பார். அப்பொழுது பெண்கள் திலகமான மாதாம்பிகையாருக்குண் டான மனமகிழ்ச்சியை அநுபவித்தவர்க்கன்றி எழுதுவார்க்கு எழுத லாகுமோ?

இப்படியே நடந்துகொண்டுவர ஒருநாள் பசவேசர் ஒருவன் ஓர் தட்டில் காய் கனி மலர் முதலியவைகளை எடுத்துக்கொண்டு போவ தைக்கண்டார். மற்றொருவன் ஓர் ஆட்டை இழுத்துக்கொண்டுபோ ய்க்கொண்டிருந்தான். அது கத்திக்கொண்டுசென்றது. எதற்காக அப்படி இழுத்துச்செல்கிறான் என்பதை அறியாது வீதியிற்சென்ற மற்றொருவனிடம் அதைப்பற்றி விசாரித்தார். அவன் "பலிகொடுக்க இழுத்துச்செல்கிறான்" என்றான். பலி என்றாலென்ன? என்றார். அவன் அதற்கு அந்த ஆட்டை இழுத்துப்போகும் கோவிலுக்குள் போய் பார் தெரியும் என்று சொல்லிப்போய்விட்டான்.

பசவேசர் அசைவற்று ஒற்றுந்தோன்றாதவராய் நின்றார். ஆட்டையோ கட்டாயப்படுத்தி இழுத்துக்கொண்டுசென்றான். இவருக்கோ கவலை மேற்படத் திடீரென்று ஓடினார். ஆட்டைப் பின்பற்றினார். மாரியம்மன்கோவிலுக்குள் சென்றார். அங்கு அநேகர்கூடியிருந்தனர். பூசை நடந்துகொண்டிருந்தது. தூப தீப நைவேத்தியங்கள்நடந்தன. யாவரும் கவலையற்ற மகிழ்ச்சியுடனிருந்தார். ஆனால் விக்கிரகத்தின் முன்னின்ற ஆட்டின் கண்ணிலே நீர்வடிந்துகொண்டிருந்தது. அதற்குப்பின்புறத்தில் சற்றே விலகிநின்ற பசவேசர் மனமட்டிலும் நடைபெறுவது இன்னதென்றறியாமல் திகைத்துநின்றது.

சிறிதுநேரத்தில் பூசாரி ஆட்டின் தலையில் தண்ணீரைத் தெளித்தான். அவன்பின் தன்னைத்தானறியாத காலனைப்போன்ற தூதனொருவன் ஓர் கூறிய கொடுவாளைக் கைப்பற்றி ஆட்டை நெருங்கினான். நமது அன்புடை வள்ளலாருக்கு அச்சம்பெரிதாயிற்று. அஞ்சா நெஞ்சன் கொடுவாளை மேலே எடுத்தான் அச்சமயத்தில் வெளியே ஒரு குரல்கேட்டது. வாளின்கீழ் நின்ற ஆடோ கத்திற்று. நெடுநேரமாக வெளியேசென்றிருந்த தன் குட்டியைப்பார்க்க ஆவலுடன் திரும்பிற்று. குட்டிகள் தன்பால் ஓடிவருவதைக்கண்டது. ஆனால் அது சமீபிக்கு முன் கொடுவாள் திடீரெனக் கழுத்தின்மேல்விழுந்தது. தலையொரு பக்கமும் முண்டம் ஒருபக்கமுமாக விலகி விழுந்தன.

அச்சமயத்தில் மாசற்ற நெஞ்சுடைய கருணைக்கடலாகிய பசவேசர் மனம் எப்படியிருந்திருக்கும்? இரத்தவெள்ளத்தைக்கண்டு கண்மூடி மனஞ்சோர்ந்து கீழே விழுந்தார். அப்பொழுது பக்கத்திலிருந்தார் அவரைக்கண்டு திடுக்கிட்டு இவர் ஏன் இவ்விடம் வந்தார் என்றஞ்சி அவரை எடுத்து அந்தப்புரத்திற்குச்செல்ல, குழந்தையைக் காணாமல் கவலைகொண்டனுப்பப்பட்ட சேவகர்கள் ஊரெங்குந்தேடி வந்து அவரை எடுத்துச்சென்றனர்.

வீட்டுக்குள்சென்றபொழுதும் பசவேசர்க்கு உணர்ச்சியுண்டாகவில்லை. பெற்றோர் முகத்தில் தண்ணீரைத் தெளித்துக் காற்றை வீசித் திருநீற்றை நெற்றியிற் றரித்து அவரது களைப்பை நீக்க, சிறிதுநேரத்தில் அம்மா! என்று திடுக்கிட்டெழுந்து பக்கத்திலிருந்த தாயாரைத் தழுவிப் பற்றிக்கொண்டார். மறுபடியும் மூர்ச்சையுற்றார். சிறிது நேரத்தில் உணர்ச்சிவர தந் தாய்முகத்தைப்பார்த்தார். அவர் கண்க

ளில் நீர் தாரை தாரையாய்ச் சொரிந்தது. மேன்மேலுந் துக்கம் அதிகரித்தது. தாய் முதலானோர் எவ்வளவோ தேறுதல்செய்தும் அவர்க்கு மனம் அமைதியுறவில்லை.

கவலையென்பதையே யறியாத பசவேசர் மனதில் அந்நாள்முதல் கவலை ஓர் மலையளவாய்ப் பெருகிற்று. விளையாட்டின்மேற்சென்ற விருப்பத்தைவிட்டார். தோழர்கள் செய்யும் எவ்வித செயல்களிலும் அவரது மனஞ்செல்லவில்லை யாதொன்றும் அவரது செவியில் ஏறவில்லை. யாரேனும் வற்புறுத்திக் கூப்பிட்டால் திடுக்கென்று பயப்பட்டாற்போல் ஏன் என்பார்.

பசவேசரது மனவேறுபாட்டைக்கண்ட தோழர்களாகிய சிறுவர்கள் ஓர்நாள் அவரில்லாதவேளையில் அடியிற்கண்டவாறு பேசிக்கொண்டிருந்தனர்.

(தொடரும்)

பெண்பாலர்.

திருவாளர், பண்டிதர் அ. கந்தசாமி பிள்ளையவர்கள்,
விரிவுரையாளர், அரசியலார் கல்லூரி கும்பகோணம்.

சருவஜ்ஞனாகிய கடவுளுக்கு ஏழைகளென்றும் தனிகரென்றும் வேறுபாடில்லை. அதுபோலவே ஆண்பாலரும், பெண்பாலரும் அவன் கருணைக்கு ஓரேவித பாத்திரர்கள். ஆண்களுக்குப் பெண்கள் வேறல்லர்.

ஒருடலில் ஆண்பாகம் வலதுதோள், வலது கண் என்றால் பெண் பாகம், இடத்தோளும், இடக்கண்ணும். ஆண்கள் ஒரு (மரக்) கொம்பாயிருந்தால், பெண்கள் அதற்கு அழகு செய்யும் (பூங்) கொடியாயிருக்கிறார்கள். ஆண்களின் புகழ் உலகமெங்கும் விளங்கும் ஒரு விளக்காயிருந்தால், பெண்களின் செய்கை அவ்விளக்கிற்கு நெய்யாயிருக்கும். ஆடவர் ஒரு நூலாசிரியராயிருந்தால், பெண்கள் அந்நூலின் காப்புச் செய்யுளின் ஆசிரியராயிருப்பர். அவர்கள் ஒரு யுத்தவீரனாயிருந்தால் அவர்களுக்கு ஆயுதம் பிடிக்கக்கற்றுக்கொடுத்தவராயிருப்பர் பெண்கள். ஒருவன் அரசனாயிருந்தால், அவன் மனைவி

அவனுக்கு அமைச்சனுயிருப்பள். ஒருவன் மானியாயிருந்தால், அவன் மானத்தைக் காத்து நிற்கும் ஆடையாய் இருப்பாள் அவன் மனைவி. ஒருவன் எஜமானனுயிருந்தால், அவனுக்கு எஜமான தத்துவத்தைக் கொடுத்த வேலைக்காரனுயிருப்பாள் அவன் மனைவி. 'ஒரு ஆண்மகனுக்கு மிகமிடுக்கான நடையை அவன் மனைவி கொடுக்கிறுள்' 0 என்றும், 'ஒருத்தனுக்கு அவன் காதலி சொல்லும் சொல் உயர்ந்த செருக்கை விளைவிக்கும்.' 8 என்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன,

ஆண்கள் வெளியே சென்று பாடுபட்டு வருகின்றனர். பெண்கள் வீட்டிலேயே யிருந்து வேலை செய்கின்றனர். ஆண்கள் சுயார்ஜிதமாய்ச் சம்பாதிக்கிறுர்கள். பெண்கள் அதனைச் சேகரித்து வைக்கிறுர்கள். ஆண் மகன் எவ்வளவு தான் பாடுபடுகிறுன், பட்டாலும் என்ன, வீட்டிற்கு வந்துதான் விச்ராந்தி அடைகிறுன். "யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" பசி தீர்ப்பதற்கு உபசரிப்புப் பெண்களிடத்திலல்லவா இருக்கின்றது. உத்தியோகத்தின் பொருட்டும், வியாபாரம், உழவு, முதலிய தொழில்களின் பொருட்டும் வெளியே செல்கிறுன்; பலவித இன்னல்களுக்கும், இடைஞ்சல்களுக்கும் இடையில் அகப்பட்டு வருந்தித் திரும்புகிறுன் அவனுக்கு வீட்டில் வந்ததும் மனைவியாரின் இன்முகமும், குளிர்ந்த சொல்லும், குழந்தைகளின் லாலனையும் அல்லவா பரிசிரமத்தை மாற்றுகின்றன. மாறினதும், பரமானந்தமுண்டாகிறது. இது இகத்தில் பெண்டிர் துணையாயிருப்பது.

இனிப்பரத்திலும் பெண்டிர் துணையாயிருப்பர். புண்ணிய கர்மங்கள் செய்யும்போது கூடவிருந்து பெண்டிர் உதவியாகின்றனர். ஞான நூல்களை ஓதல், உணர்தல் இவற்றிலும் மனதிற் சஞ்சலமடையாதபடி காக்கின்றனர். தோத்திரப் பாடல்களைப் பாடிக்கேட்பித்தும் அவர்கள் மனதைக் கடவுளிடத்துச் செலுத்துகின்றனர். இன்னும் எத்தனையோ விதங்களில் பெண்மக்கள் ஆண் மக்களுக்கு உதவுகின்றனர். இதில் ஏதேனும் அதிசயோக்தி உண்டோ?

---

0 புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோல் பீடுநடை. (திருக்குறள்)

8 காதலி சொல்லிற் பிறக்கும் உயர்மதம். (நான்மணிக் கடிகை)

இத்தகைய பெண் மக்கள் கற்பென்னும் உயர்ந்த யோக்கியதை வாய்த்திருந்தால் அவர்கள் தேவர்களினும் மிக்கவர் ஆவர். கற்பு என்பது காரணப்பெயர். அது "கொண்டானிற் சிறந்த தெய்வமில்லை; அவனை இன்னவாறே வழிபடுக; என்று பெற்றோர் கற்பிப்பதால் அப்பெயர் பெற்றது அல்லாமலும் ஒரு புருடன் தன் மனைவியை நோக்கி நீ அந்தணர் திறத்து இன்னவாறு ஒழுகு; சான்றோரிடத்தும் ஐயர் பாங்கிலும், அமரர் திறத்தும் இவ்வாறு நடந்துகொள்; என்று கற்பிப்பதாலும் அது காரணப் பெயர் நிற்க, கற்புடைய மகளிர்க்குக் கணவனே தெய்வம்.

வேறு தெய்வங்களைத் தொழாமல் கணவனையே தெய்வமென்று தொழுது எழும் ஒருத்தி, கேவலம் பெண் ஜென்மமாயிருந்தாலும், அவள் பார்த்துப் "பெய் என்றால் மழை பெய்துவிடும்." என்பது பொய்யில் புலவரது பொருள் மொழியாகும். இக்கற்பின் மகத்துவத்தால் பண்டைக் காலத்து மகளிர் செய்த அற்புதச் செயல்கள் பல, பொழுது விடியாமலிருந்தது, போன உயிர் திரும்பிவந்தது, நெருப்பு குளிர்ந்தது முதலிய எத்தனையோ இருக்கின்றன.

திருவள்ளுவ நாயனாரது மனைவியார் வாசுகி யென்னும் திருப்பெயர் படைத்த மாதர். அவரைப்பற்றிய விருத்தாந்தங்கள் பல. ஒரு நாள் வாசுகியார் தம் வீட்டுக் கிணற்றில் நீர் சேந்திக்கொண்டிருந்தனர்; அப்போது அவரது நாயகனார் அழைக்கத், தண்ணீர் சேந்திய கயிற்றை நீர் நிறைந்த தோண்டியோடு பாதியளவில் மேலே வந்தபடியே விட்டுவிட்டு வந்தனர். தமது கணவனுக்குச் சிசுருஷையெல்லாம் செய்துவிட்டுத் திரும்பிப்போகும் வரையிலும் அந்தக்கயிறும் தோண்டியும் அப்படியே நின்றுகொண்டிருந்ததாம். அதனைக்கண்டஅனைவரும் வியந்து அவரைப் புகழ்ந்தனராம்.

மற்றொருநாள் அப்பெருமாட்டி, தன் கணவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கையில் ஒரு தபசி பிச்சை கேட்டார்; தமது நாயகரது பணிவிடை முடிந்ததும் பிச்சை கொண்டுவந்த கற்பரசியாரை அத்தவ அரசர் கோபித்துப் பார்த்தார்; அதை லட்சியம் செய்யாமல் கொக்கென்று இருந்தாயோ கொங்கணவா என்று பதில் கூறிப் பிச்சையிட்டார். என்பது முதலியவைகள் கற்பின் பெருமையை விளக்குகின்றன.

இவற்ருல் **குலமகட்குத் தெய்வம் கொழுநனே** என்பது பெற்ரும். இதை வியதிரேக முத்தானும் விளக்குவதற்கு மற்ருெரு கதையும் ஞாபகத்திற்கு வருகிறது.

வெகு நாளைக்கு முன் **காவிரிப்பூம்பட்டினத்தில் மருதி** யென்பாள் ஒரு பார்ப்பனி இருந்தாள். ஒருநாள் அவள் நீராடச் செல்லுகையில் அவ்வூர் அரசகுமாரன் ஒருவன் அவளது வடிவழகைக்கண்டு காதல்கொண்டு தீயவார்த்தைகள் சிலவற்றைச் சொல்லத்தொடங்கினன். அது கேட்டு அந்தப் பார்ப்பனி, துடிதுடித்து, அலறி அருகிலிருந்த ஒரு தெய்வ ஆலயத்தின் முன்னின்று முறையிடலானுள். அது : ஒ! தெய்வமே! நான் பத்தினி! என் மனமறியச் சிறிதும் நான் எனது பாதிவ்ருத்தத்தினின்றும் தவறவில்லையே !

அப்படியிருந்தும் அந்நியனுல் விரும்பப்பட்டேன். **பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்** என்பர். இவன் விரும்பிய நான் கற்பிழந்தவளேயாயினேன். நான் கற்பு நெறி தவறியது எப்படி ? என்று முறையிட்டனள்.

அதற்கு அந்தத் தெய்வம், 'பார்ப்பனி ! பொய்யும் புனைந்துரையும் பேசுவோர் கூட்டங்களுக்கு அடிக்கடி சென்ருய் ; கோயில்களில் நடக்கும் திருவிழா முதலிய விசேடங்களில் கடவுளைக் கும்பிடவும் போய்க்கொண்டிருந்தாய்; கணவனைத் தவிர வேறே தெய்வமில்லை என்னும் நியதியை மீறினுய். ஆதலின், உன்னை விரும்ப எழும் நெஞ்சைச் சுடும் தன்மை உனக்கு இல்லாமற்போயிற்று. என்று கூறிற்று என்பது.

இக்கதையினுல் நம் தமிழ்நாட்டு மகளிர் கற்பின்தன்மை எவ்வாறு விளங்குகிறது பாருங்கள் !

இனி, வடநாட்டு மாதர் கற்புக்கும், தென்னுட்டு மாதர் கற்புக்கும் உள்ள வேறுபாட்டை ஒரு சிறிது காட்டுகிறேன்.

மகாபாரதத்தில் புருஷன் இறந்துவிடக் கொழுந்தனுக்குப் பிள்ளை பெற்ருர்களென்று கேட்கப்படுகிறது. ஒருத்தியே ஐந்து பேருக்கு மனைவியாயிருந்தாளென்று கேட்கப்படுகிறது. இவையெல்லாம் வடநாட்டின் வழக்கம். (தொடரும்.)

கருகிச்சி வந்தகடு வருகிப்போ ருந்தமிளிர்
களம்வாழ்வு மேவவணிவாய்
கடலிற்சி றந்தநிற வுடலிற்றி ருந்துமணி
கதிர்போல வேயுநெடுமோல்
ஒருகட்சி சைந்தவடி யிருகட்கி ணங்கவற
முடையார்மு னேடிவருவா
யுலகத்தை வென்றமன மிலகுற்ற மன்றினிடை
யுமைகாண வாடல்புரிவாய்
மருகற்பெ ரும்பதியி லொருகற்ப ணங்குதோழ
மணவாள னுவியுதவா
மயிலைக்க ணேன்பினுயிர் பயில்வுற்றெ ழுந்துவர
வருவாயெ ஞுமுனமையா
வருகர்க்க ணங்குதரு முருகர்க்கு கந்தவர
னபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

(இ - ள்.) கருகி — (உலகமெங்கும் இருள் மயமாகும்படிக்) கருநிறமாகத்தோன்றி, — சிவந்த - (தேவர் முதலிய சராசரங்களனைத்தையும் அழித்தற்காகக்) கோபித்தெழுந்துவந்த,— கடு - (மிகப் பெருகியதோர்) ஆலகால விஷத்தை, — அருகிப்பொருந்த - சுருங்கின அளவினதாகப் பொருந்துமாறு, — மிளிர்களம் - விளங்குகின்ற கண்டத்தின்கண், — வாழ்வுமேவ - (அத்தேவர் முதலிய அனைத்துயிரும்பிழைத்து) நல்வாழ்வினையடையவேண்டி, — அணிவாய் - (பெருங்கருணைத்திறத்திற்கோர் அடையாளமாக அணிபோல் விளங்க) அணிபவனே! — கடலிற் சிறந்த நிறம் உடலில் - கடல் போல விளங்கித்தோன்றும் நீலநிறமான திருமேனியின்கண், — திருந்துமணி-(வேண்டிய இலக்கணங்களிற் குறைவின்றித்) திருந்திய கவுத்துவமணி, — கதிர்போல ஏயும் - சூரியனைப்போலப் பொருந்தப்பெற்றுள்ள, — நெடுமால் - திருமால், — ஒருகட்கு இசைந்த - தனதொரு கண்ணைப் பிடுங்கி அருச்சித்த அச்செயலுக்கு இசைந்திருந்த,

— அடி - உனது திருவடிகள்,—இருகட்கு இணங்க - இரண்டு கண்களும் எளிதிற் கண்டுதரிசித்தற்குத் தாமாக இணங்கி முன்னிற்கும்படி,— அறம் உடையார்முன் ஓடிவருவாய் - (வேதாகம முறைப்படி) சிவபுண்ணியத்தைச் செய்யும் உண்மையடியார் முன் விரைந்து வந்தருள் செய்பவனே ! — உலகத்தை வென்ற மனம் - (உலகத்தோற்ற மனைத்தும் மாயா கற்பிதமென்று) உலகப்பற்றை வெறுத் தொழித்து அகமுகத்தால் தியானிக்கும் மெய்ஞ்ஞானியரது உள்ளமாகிய,—இலகுற்ற மன்றினிடை - விளங்குகின்ற சபையின்கண்,— உமைகாண - உமாதேவியார் கண்டு மகிழும்படி,— ஆடல்புரிவாய் - நடனஞ்செய்தருள்பவனே! — மருகல் பெரும்பதியில் - திருமருகல் என்னுந் தலத்தின்கண்,— ஒரு கற்பு அணங்கு தொழ - ஒப்பற்ற கற்புடைய தெய்வமகளிரையனைய ஓர் பெண் வணங்க, — மணவாளன் ஆவி உதவா - (விஷந்தீண்ட இறந்த) மணத்தற்குரிய காதலனது உயிரைக் கொடுத்தெழுப்பி, — மயிலைக்கண் - திருமயிலை என்னுந் தலத்தின் கண்,— என்பின் - (ஞானசம்பந்தர்க்கென அற்பிதஞ்செய்து வைத்திருந்த சிவநேசச் செட்டியாரது பெண்ணினுடைய) எலும்பின்கண்,— உயிர்பயில்வுற்று - உயிரும் வியாபித்து, — எழுந்துவர - (கும்பத்தினின்றும் பெண்ணுருவாக) எழுந்துவரும்படி,—வருவாய் என முன் - (அச்சம்பந்தர் நகையாடுஞ் சமணர் முன்னே எனது பாடலுக்குகந்து விரைந்து) வருவாய் என்றழைப்பதற்கு முன், — அழையா - அப்பெண்ணை உயிர்ப்பித்து வரும்படி அழைத்து,— அருகர்க்கு அணங்குதரும் - சமணர்கட்குத் துன்பத்தைத் தந்த,— முருகர்க்கு உகந்த - திருப்புகலூர் முருகநாயனரது பணிக்குவந்து முத்தியளித்தருளிய,—அரன் - அரனென்னுந் திருப்பெயருடைய இறைவனே! — அபிடேகம் ஆடியருள் - (யான் செய்யும்) அபிஷேகத்தை எற்றுக்கொண்டருள்வாயாக; என்றபடி. 'அறிவுற்று.........ஆடியருள்' என்பதற்கு முன்னருரைத்தாங்குரைத்துக் கொள்க.

அமராதியோர் வாழ்வுமேவ கடுவைக் களத்தில் அணிபவனே ! அறமுடையார் முன் விரைந்து வந்தருள்பவனே ! மனமன்றில் உமையவள் காண மகிழ்ந்தாடுபவனே! எனவும், மணவாளன் ஆவியுதவி, மயிலைக்கண் என்பின் உயிர் பயில்வுற்றெழுந்துவர 'வருவாயென முன்' அழைத்து, அருகர்க்கு அணங்கைத் தாரநின்ற, முருகர்க்குகந்த இறைவனே ! எனக்கூட்டி முடிக்க.

இதன்கண், முருகன்என்னுஞ் சொல்லுக்குக் ' கட்டிளமையோன்', எனப்பொருளுண்மையால், முருகர்என்பதற்கு ஞானசம்பந்தப்பிள்ளையாரெனப்பொருள்கூறி, ' மருகற்பெரும்பதியின் ஒருகற்பணங்கு தொழ மணவாளன் ஆவியுதவா மயிலைக்கண் என்பினுயிர் பயில்வுற்றெழுந்துவர வருவாயெனுமுனழையா அருகர்க்கு அணங்கு தரும் முருகர். ' என ஒரு தொடராக்கி, திருமருகலில் ஓர் கற்புடையாள் வணங்க அவளது மணாளனது உயிரையுதவியும், திருமயிலையின்கண் எலும்பில் உயிர் வியாபித்து எழுந்துவரும்படி பூம்பாவாய்! விரைந்து வருவாயென்று முன்னரழைத்தும் அருகர்க்கு அணங்கைத் தந்த முருகர் எனப்பொருள் கூறினும் பொருந்தும். இப்பொருளில் உதவா அழையா இவ்விரண்டு செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சங்கள் அணங்குதரும் என்னும் பெயரெச்சத்தையும், அப்பெயரெச்சம் முருகர் என்னும் பெயரையும் கொண்டு முடிதல் காண்க. ' அருகற்கணங்கு தரும் முருகற்கு ' எனப்பாடபேதங்காட்டி, அரிய கல்லாகிய கிரவுஞ்சமலைக்குத் துன்பத்தைத் தந்த சிங்கார வேலற்கு எனப் பொருள் கூறுவாருமுளர்.

ஆசிரியர் இதனால் சிவபெருமானே தேவாதி தேவனாகிய மகா தேவனென்னும் உண்மையும், அப்பெருமான் செருக்குற்றூர்க்கு அரிதிலும் அஃதில்லாத அடியார்க்கு எளிதிலும் தன் திருவடிப் பேற்றைத் தருந்தன்மையும், ஞானிகளது சிதாகாசச்சிற்சபையில் ஆனந்த நடனம் புரிந்தருளுமியல்பும், அடியார் சமயவுண்மையை நிலைநாட்ட வேண்டும் செயற்கருஞ் செயல்களையும் முடித்தருளும் கருணையும் விளங்க வுணர்த்தினாராயிற்று.

விஷமுண்ட வரலாறு:—திருமால் முதலிய தேவரும் அசுரரும் தம் வலியை யுணரா்து தாமே பாற் கடலைக் கடைந்தனர். அதினின்றும் கொடிய விடந்தோன்றி அவர்களை அழிக்கத் தொடங்கிற்று. கதியிழந்த தேவர் முதலியோர் கயிலையையடைந்து கடவுளை வணங்கினர். இறைவர் சுந்தரரால் அவ்விஷத்தைக் கொணர்வித்துத் தங் கண்டத்திலிறுத்தி அத்தேவரைக் காத்தனர் என்பது.

திருமால் கண்ணிடந்தருச்சித்த வாலாறு:—திருமால் ஓர் காலத்தில் சக்கராயுதம் பெறக்கருதி ஓரிடத்தமர்ந்து நாள்தோறும் ஆயிரங்

தாமரை மலர்கொண்டு சிவலிங்கப்பெருமானை அருச்சித்து அன்புடன் பணிந்து வந்தனர். அவர் கொண்டுவந்த ஆயிர மலர்களில் ஓர் நாள் ஒரு மலர் குறைவுற்றது. திருமால் அக்குறையை நிறைவாக்கத் தங்கண்ணில் ஒன்றைப் பிடுங்கி அருச்சித்துப் பெருமானருளால் சக்கரம் பெற்று மகிழ்ந்தனர் என்பது.

திருமருகலில் விஷத்தாலிறந்தவனை யுயிர்ப்பித்த வரலாறு:—காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த வணிகனொருவன் தன் பெண்கள் எழுவருள் அறுவரைத் தன் மைத்துனர்க்குக் கொடுப்பதாகக் கூறி ஏமாற்றிவிட்டனன். அவனது ஏழாவது மகளாகிய கற்புடையாள் தன் மாதுலன் படுந்துன்பத்திற்கிரங்கி மணந்துகொள்வதாக வுடன்பட்டனள். அவ்விருவரும் மதுரையை நோக்கிச் செல்லும் வழியில் திருமருகலில் தங்கினர். அங்கு அவ்வணிகன் விஷந்தீண்ட இறந்தனன். அப்பெண்மணி கன்னிகையாதலின் அவனைத் தீண்டாது நின்று அரற்றியழுதனள்; அத்தலத்தில் எழுந்தருளிய ஞானசம்பந்தர் பதிகம் பாடி அவனையுயிர்ப்பித்து அவ்விருவர்க்கும் மணஞ்செய்வித்து வாழும்படி அருள் செய்தனர் என்பது.

எலும்பைப் பெண்ணாக்கிய வரலாறு:—சென்னையைச் சார்ந்த மயிலாப்பூரில் சிவநேசச் செட்டியாரென்னும் பெரியார் அருந்தவம் புரிந்து பெற்ற தம் புதல்வியை ஞானசம்பந்தர்க்கு மணஞ் செய்விப்பதாக உறுதிகொண்டிருந்தனர். அப்பெண் பூநாகந் தீண்ட இறந்தனள். அச்சிவநேசர் வருந்தித்தேறி அவளது எலும்புகளைக் குடத்திற் சேமித்து வைத்திருந்து ஞானசம்பந்தரிடங்காட்டி தம்மெண்ணத்தை வெளியிட்டு வேண்டினர். பிள்ளையார் “மட்டிட்ட புன்னையங்கானன் மடமயிலைக், கட்டிட்டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான், ஒட்டிட்ட பண்பினுருத்திரபல் கணத்தார்க், கட்டிட்டல் காணாதேபோதியோ பூம்பாவாய்” என்றற்றொடக்கத்துத் திருப்பதிகம் பாடி பரிகசித்து நின்ற சமணர் வருந்த அப்பெண்ணை யுயிர்பித்தருளினர் என்பது.

திருநெல்வேலி ஜில்லா

வீரசைவாபிமான அபிவிருத்தி சங்கம்.

திருவருளால் 12—6—29-ல் ஸ்ரீவைகுண்டம் கஸ்பா புதுக்குடியில் இச்சங்கத்தின் விஷயாலோசனைக் கூட்டம் பத்தமடை திருவாளர் அ. சு. வேலாயுதம் பண்டாரம் அவர்கள் தலைமையின்கண் நடைபெற்றது. தலைவர் முன்னுரை கூறிய பின்னர், ஐயனூர்குளம்பட்டி திருவாளர் ச. நா. மூ. சுந்தரம் பண்டாரம் அவர்கள் அடியிற்கண்ட தீர்மானங்கள் எடுத்துரைக்க ஆலோசனையின்மேல் அத்தீர்மானங்கள் நிறைவேறின என, ச. கா. மூ. சுந்தரம் பண்டாரம் தெரிவிக்கிறார்.

தீர்மானங்கள்.

1. திருச்செந்தூரின்கண் சண்முகப்பெருமானது தரிசனத்திற்கு வரும் வீரசைவரனைவரும் தங்கிச் சமயல் முதலியன செய்துகொள்வதற்கு வசதியாக ஓர் மடங்கட்டுதல்வேண்டும். அதற்குக் கும்பகோண மடாலயத்தில் தற்காலமிருக்கும் "ஸ்ரீமுருகபசவதேசிகேந்திர சுவாமிகள் மடாலயம்" எனப்பெயர் கொடுக்கவேண்டும் என்பது.

2. இம்மடாலயத்திற்குப் பொறுப்பாளராகச்சேர்வோர் 30-7-29க்குள் மூலதனமாக ரூ. 25 கொடுத்துச் சேருதல்வேண்டும் என்பது.

3. திருநெல்வேலி ஜில்லா வீரசைவாபிமானிகள் ஒவ்வொருவரும் ரூ 5 வீதம் தவறுமல் காரியதரிசி அல்லது பொக்கிஷதாரிடம் கொடுத்து ரசீது பெறவேண்டுமென்பது.

4. காரியதரிசி :-ச. நா. மூ. சுந்தரம் பண்டாரம். ஐயனூர்குளம் பட்டி செய்துங்கநல்லூர் P. O.

பொக்கிஷதார்:-ரா. ஆறுமுகபண்டாரம், புதுக்குடி, ஸ்ரீவைகுண்டம், P. O.

பவானி வீரசைவ சங்கம்.

திருவருளால் இந்நகரின்கண் சென்ற ஆவணி விநாயக சதுர்த்தி தினம் இச்சங்கந்தாபிக்கப்பெற்றது. B. H. S. தமிழ்ப் பண்டிதர் திரு. கு. குருசாமி பிள்ளையவர்கள் சைவசமய வொழுக்கங்களை உரைத்துவர உறுப்பினர் யாவரும் சீர்திருத்தமடைந்து வருகிறார் என நமது சந்தாநேயர் திரு. அ. ஆறுமுக பண்டாரம் அவர்கள் தெரிவிக்கிறார்.

வீரசைவப் பெருந் திருமணம்.

கொள்ளேகால் தாலூகா போர்டு தலைவர் திரு G. P. மல்லப்பா அவர்கள் மூன்றாவது புதல்வியின் திருமணம் 20—6—29-ல் சிறப்புற நடைபெற்றது. பல பிரபுக்களும் சரமூர்த்திகளும் வந்திருந்தனர் திருமிகு பாலகந்தருவ G. M. நடராஜய்யாவின் சங்கீதக் கச்சேரி நடந்தது. இம்மணத்தில் நாவின் சுவையைப் புகழ்வார் சிலர், செவியின் சுவையைப் புகழ்வார் பலருமாவர். தலைவரது நற்குணத்திற்கேற்ப வைதீக லௌகிகங்கள் வீரசைவரனைவரும் பின்பற்றுமுறையில் பொலிந்து விளங்கின. மணமகனும் மணமகளும் நீடூழி வாழ்க.

சந்தா நேயர்கட்கோர் விண்ணப்பம்:—

சமயாபிமான மிக்க பெரியீர் !

இப்பொழுது நமது வீரசைவத்தின் 7-வது இதழும் வெளிவந்துலவுகிறது. பலமுறை ஞாபகப்படுத்தியும் இன்னுஞ்சில நேயர்கள் சந்தாவை அனுப்பாமலிருக்கின்றனர். V. P.-ல் அனுப்புவதால் எமக்கும் நேயர்களுக்கும் பணச்செலவும் வேலையும் அதிகமாகின்றன. 6-மாதம் பத்திரிகையை அனுப்பிவிட்டு இனி அனுப்பாது விடுதல் பெருந்தன்மையன்றெனக் கருதும் இக்கழகத்தார்க்கு இனியும் மிகையான வேலையைக் கொடுக்காது சந்தாவை மணியார்டர்செய்து ஆதரிப்பீர்களென எதிர்பார்க்கின்றோம். நேயர்கள் வேறிடங்களுக்குச் செல்வதாயிருந்தால் அந்த இடத்தின் விலாசத்தை உடனே இந்த நிலையத்திற்கு அறிவித்தல் வேண்டும். பத்திரிகை சம்பந்தமாக ஏதேனும் அறியவிரும்புவோர் ரிப்ளை கார்டு அனுப்புதல்வேண்டும். குறித்த காலத்தில் பத்திரிகை கிடைக்காவிட்டால் தபாலாபீசில் எச்சரிக்கை செய்யவேண்டும். கட்டுரையெழுதுவோர் பிரதிமாதம் 20-உக்குள் அனுப்புவித்தல்வேண்டுமென வேண்டுகின்றோம்.

பத்திராசிரியர்.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா முன்பணம் :— ...	25—0—0
ஆண்டுச் சந்தா :— ...	2—0—0
மாணவர்கட்கு :— ...	1—8—0
தனியிதழ்:—	0—4—0